Sl. No. : **20000153**

**AAOGS/17**

பதிவு எண் | | | | | | | | | |

# 2017

# பொது அறிவு

# (மேல்நிலை கல்வித்தரம்)

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 2 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 200

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **100** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும், சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. <u>தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.</u>
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
12. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.
13. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

SEAL

SPACE FOR ROUGH WORK

1. A and B travel the same distance at the speeds of 10 kmph and 15 kmph respectively. If A takes 30 minutes longer than B then distance travelled is

(A) 15 km (B) 20 km

(C) 90 km (D) 30 km

A, B என்னும் இருவர், ஒரே தூரத்தை முறையே 10 கி.மீ./மணி, 15 கி.மீ./மணி வேகத்தில் கடந்து செல்கிறார்கள். B-ஐ விட 30 நிமிடங்கள் அதிகம் A எடுத்துக் கொள்கிறார் எனில் அவர்கள் கடந்து சென்ற தூரம் என்ன?

(A) 15 கி.மீ. (B) 20 கி.மீ.

(C) 90 கி.மீ. (D) 30 கி.மீ.

2. Remainder when the polynomial $5x^3+2x^2-6x+12$ divided by $(x+2)$ is

(A) $5x^2-8x+10$ (B) $x+8$

(C) $-8$ (D) $-72$

$5x^3+2x^2-6x+12$ -ஐ $(x+2)$ -ஆல் வகுக்கக் கிடைக்கும் மீதி எது?

(A) $5x^2-8x+10$ (B) $x+8$

(C) $-8$ (D) $-72$

3. In a rectangle if the length is increased and breadth is reduced by 3 cm then area is reduced by 18 cm². If the length is reduced by 1 cm and breadth is increased by 2 cm then the area is increased by 14 cm². Actual length and breadth of the rectangle are respectively

(A) 13 cm; 10 cm (B) 14 cm; 9 cm

(C) 12 cm; 12 cm (D) 15 cm; 8 cm

ஒரு செவ்வகத்தின் நீளம் 3 செ.மீ. அளவு அதிகரிக்கப்பட்டு அகலம் 3 செ.மீ. அளவு குறைக்கப்பட்டால் பரப்பளவானது 18 செ.மீ.$^2$ அளவு குறைந்து விடும். நீளத்தில் 1 செ.மீ. அளவு குறைக்கப்பட்டு அகலத்தில் 2 செ.மீ. அளவு அதிகரிக்கப்பட்டால் பரப்பளவானது 14 செ.மீ.$^2$ அளவு அதிகரித்து விடும். எனில் அச்செவ்வகத்தின் நீளம் மற்றும் அகலம் முறையே

(A) 13 செ.மீ.; 10 செ.மீ. (B) 14 செ.மீ.; 9 செ.மீ.

(C) 12 செ.மீ.; 12 செ.மீ. (D) 15 செ.மீ.; 8 செ.மீ.

4. Edge of a cube is increased by 50% then find percentage increase in total surface area of the cube.

(A) 108% (B) 125%

(C) 90% (D) 80%

ஒரு கன சதுரத்தின் பக்கம் 50% உயர்த்தப்பட்டால் அதன் மொத்தப் புறப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பின் சதவிகிதம் என்ன?

(A) 108% (B) 125%

(C) 90% (D) 80%

5. $129^2 - 29^2 = ?$

(A) 12000 (B) 15000

(C) 15800 (D) 10000

$129^2 - 29^2 = ?$

(A) 12000 (B) 15000

(C) 15800 (D) 10000

6. Sum of a number and its reciprocal is 4 then value of sum of cube of the number and reciprocal of the cube is

(A) 64 (B) 52

(C) 48 (D) 24

ஓர் எண் மற்றும் அதன் தலைகீழியின் கூட்டுத்தொகை 4 எனில், அவ்வெண்ணின் மும்மடி மற்றும் மும்மடியின் தலைகீழி ஆகியவற்றின் கூட்டுத்தொகை எவ்வளவு?

(A) 64 (B) 52

(C) 48 (D) 24

7. An angle and its supplementary angle are in the ratio 4 : 5 then that angle is

(A) 80° (B) 100°

(C) 40° (D) 50°

ஒரு கோணமும் அதன் மிகை நிரப்புக் கோணமும் 4 : 5 என்ற விகிதத்தில் இருப்பின் அக்கோணம் எது?

(A) 80° (B) 100°

(C) 40° (D) 50°

8. HCF of $x^2 - 2xy + y^2$ and $x^4 - y^4$ is

(A) 1 (B) $x + y$

(C) $x - y$ (D) $x^2 - y^2$

$x^2 - 2xy + y^2$ மற்றும் $x^4 - y^4$ ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தி (மீ.பொ.வ.) எது?

(A) 1 (B) $x + y$

(C) $x - y$ (D) $x^2 - y^2$

9. TAMIL is coded as RCKKJ then MATHS is coded as

(A) KCRJQ (B) KCRRU

(C) RCKKU (D) RCKJQ

TAMIL என்னும் சொல் RCKKJ எனக் குறியீட்டாக்கம் செய்யப்பட்டால் MATHS எனும் சொல்லுக்குரிய குறியீட்டாக்கம் எது?

(A) KCRJQ (B) KCRRU

(C) RCKKU (D) RCKJQ

10. Among five liquids A, B, C, D, E the boiling point of A is less than that of E but more than that of B where B has a higher boiling point than C. The boiling point of D is higher than that of E. Which liquid has the least boiling point?

(A) A (B) B

(C) C (D) D

A, B, C, D, E என்ற ஐந்து நீர்மங்களுள் A-யின் கொதி வெப்பநிலையானது E-யின் கொதி வெப்பநிலையை விடக் குறைவாகவும் B-யின் கொதி வெப்பநிலையைக் காட்டிலும் அதிகமாகவும், B-யினது C-யின் கொதி வெப்பநிலையைக் காட்டிலும் அதிகமாகவும் இருக்கிறது. D-யின் கொதி வெப்பநிலையானது E-யினதைக் காட்டிலும் அதிகம் எனில் எந்த நீர்மத்தின் கொதி வெப்பநிலை மிகக் குறைவாக இருக்கும்?

(A) A (B) B

(C) C (D) D

11. $n^{th}$ term of a series is given by $a_n = (-1)^n(1-n+2^n)$. Then $5^{th}$ term of the series is

(A) $-21$ (B) $-6$

(C) $-28$ (D) 6

ஒரு தொடரின் $n$-ஆம் உறுப்பு காணும் வாய்பாடு $a_n = (-1)^n(1-n+2^n)$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது எனில் அத்தொடரின் 5-ஆம் உறுப்பு எது?

(A) $-21$ (B) $-6$

(C) $-28$ (D) 6

12. If $k+1$, $3k$ and $4k+2$ are any 3 consecutive terms of an Arithmetic Progression then value of $k$ is

(A) 0 (B) 1

(C) 2 (D) 3

$k+1$, $3k$ மற்றும் $4k+2$ ஆகியன ஒரு கூட்டுத் தொடரில் அமைகின்றன எனில் $k$-ன் மதிப்பு

(A) 0 (B) 1

(C) 2 (D) 3

13. Find the missing number :

1, 3, 6, 10, ?, 21, 28 ...

(A) 16 (B) 15

(C) 20 (D) 17

விடுபட்ட எண்ணைக் காண் :

1, 3, 6, 10, ?, 21, 28 ...

(A) 16 (B) 15

(C) 20 (D) 17

14. A monochromatic light of wavelength 589 nm is incident on a water surface having refractive index 1.33. Find the velocity of light in water.

(A) $3\times10^{8}\ ms^{-1}$ (B) $332\ ms^{-1}$

(C) $280\ ms^{-1}$ (D) $2.25\times10^{8}\ ms^{-1}$

ஒளிவிலகல் எண் 1.33 உடைய நீரின் மீது 589 nm அலை நீளமுடைய ஒற்றை நிற ஒளி படுகிறது. நீரினுள் ஒளியின் திசைவேகத்தை கணக்கிடு.

(A) $3\times10^{8}\ ms^{-1}$ (B) $332\ ms^{-1}$

(C) $280\ ms^{-1}$ (D) $2.25\times10^{8}\ ms^{-1}$

15. The colour light emitted by LED depends on

(A) its reverse bias (B) its forward bias

(C) the amount of forward current (D) type of semiconductor material

ஒளி உமிழ் டையோடில் உமிழப்படும் ஒளியின் நிறம் ———————— சார்ந்தது.

(A) அதன் பின்னோக்கு சார்பு (B) அதன் முன்னோக்கு சார்பு

(C) முன்னோக்கு மின்னோட்ட அளவு (D) குறைகடத்தி பொருளின் வகை

16. Which is called "Aqua tortis"?

(A) $H_2SO_4$ (B) $HNO_3$

(C) HCl (D) $H_3PO_4$

"அகுவா டார்டிஸ்" என்றழைக்கப்படுவது எது?

(A) $H_2SO_4$ (B) $HNO_3$

(C) HCl (D) $H_3PO_4$

17. Insectivorous plants not able to synthesize enough protein due to the deficiency of

(A) Hydrogen (B) Carbon

(C) Nitrogen (D) Oxygen

பூச்சி உண்ணும் தாவரங்கள் ———————— பற்றாக்குறைவினால் புரதத்தை தயாரிக்க முடிவதில்லை.

(A) ஹைட்ரஜன் (B) கார்பன்

(C) நைட்ரஜன் (D) ஆக்சிஜன்

18. The total amount of energy released from one molecule of glucose on oxidation is about

(A) 2600 kJ (B) 2300 kJ

(C) 2900 kJ (D) 2500 kJ

ஒரு மூலக்கூறு குளுக்கோஸ் முழுமையான ஆக்சிஜனேற்றத்தின் போது வெளிப்படுத்தும் ஆற்றலின் அளவு

(A) 2600 kJ (B) 2300 kJ

(C) 2900 kJ (D) 2500 kJ

19. Which is known as "Sundew Plant"?

(A) Cuscuta (B) Drosera

(C) Vanda (D) Viscum

சூரிய பனித்துளித் தாவரம் என்று அழைக்கப்படுவது

(A) கஸ்குட்டா (B) ட்ரஸீரா

(C) வாண்டா (D) விஸ்கம்

20. Which player of India played most Test matches as captain?

(A) M.S. Dhoni

(B) S. Ganguly

(C) Mohammad Azharuddin

(D) S. Gavaskar

அதிகமான டெஸ்ட் போட்டிகளில் கேப்டனாக விளையாடிய இந்திய வீரர் யார்?

(A) எம்.எஸ். தோனி

(B) எஸ். கங்குலி

(C) முகமது அசாருதீன்

(D) எஸ். கவாஸ்கர்

21. Which is the first team to play 900 One day International Cricket matches?

(A) Australia (B) Srilanka

(C) India (D) Pakistan

900 ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய அணி எது?

(A) ஆஸ்திரேலியா (B) இலங்கை

(C) இந்தியா (D) பாகிஸ்தான்

22. The Indian rupee symbol ₹ was adopted by Indian Government in the year ————.

(A) 2006 (B) 2010

(C) 2011 (D) 2007

இந்திய ரூபாயின் குறியீடாக ₹-ஐ இந்திய அரசு ஏற்றுக்கொண்ட வருடம் ————.

(A) 2006 (B) 2010

(C) 2011 (D) 2007

23. Which Act legally recognized the principle of election to the legislative councils?

(A) Act of 1861 (B) Act of 1892

(C) Act of 1909 (D) Act of 1919

சட்டமன்றங்களுக்கான தேர்தலை சட்டபூர்வமாக ஏற்றுக் கொண்ட சட்டம்

(A) 1861ம் ஆண்டு சட்டம் (B) 1892ம் ஆண்டு சட்டம்

(C) 1909ம் ஆண்டு சட்டம் (D) 1919ம் ஆண்டு சட்டம்

24. NITI Aayog came into existence on

(A) 1st January – 1950 (B) 1st January – 2015

(C) 1st January – 1947 (D) 1st January – 1948

NITI ஆயோக் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட ஆண்டு

(A) ஜனவரி-1, 1950 (B) ஜனவரி-1, 2015

(C) ஜனவரி-1, 1947 (D) ஜனவரி-1, 1948

25. According to Socio-Economic and Caste Census (SECC), 2015, which state has the highest literacy rate?

(A) Sikkim (B) Tamil Nadu

(C) Kerala (D) Haryana

2015ல் நடந்த சமூக பொருளாதார சாதி வாரியான கணக்கெடுப்பின் (SECC) படி கீழ்கண்ட மாநிலங்களில் எந்த மாநிலத்தில் அதிக படிப்பறிவு சதவீதம் உள்ளது?

(A) சிக்கிம் (B) தமிழ்நாடு

(C) கேரளா (D) ஹரியானா

26. Match List I with List II and choose the correct answer from the codes given below :

(FIFA World Cup Football)

| List I | | List II | |
|---|---|---|---|
| (a) | Russia | 1. | 2006 |
| (b) | Brazil | 2. | 2010 |
| (c) | South Africa | 3. | 2014 |
| (d) | Germany | 4. | 2018 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

பட்டியல் I லிருந்து பட்டியல் II பொருத்துக. சரியான விடையை குறியீடுகளிலிருந்து தேர்ந்தெடு :

(பிபா உலகப்கோப்பை கால்பந்து)

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| (a) | ரஷ்யா | 1. | 2006 |
| (b) | பிரேசில் | 2. | 2010 |
| (c) | தென் ஆப்ரிக்கா | 3. | 2014 |
| (d) | ஜெர்மனி | 4. | 2018 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

27. The Union Government launched the new digital payment system, Bharat QR code in February 2017. QR code stands for

(A) Qwerty Response Code
(B) Quick Response Code
(C) Queue Response Code
(D) Quasi Response Code

பிப்ரவரி 2017-இல் மத்திய அரசு பாரத்–QR குறியீடு என்ற புதிய எண்ணிலக்க பணம் செலுத்து முறையினை தொடக்கியுள்ளது. QR குறியீடு என்பது இதைக் குறிக்கும்

(A) Qwerty Response குறியீடு
(B) Quick Response குறியீடு
(C) Queue Response குறியீடு
(D) Quasi Response குறியீடு

28. The integrated grievances redressal platform for petroleum and gas related queries across social media launched by the union ministry in March 2017 is

(A) Gem SPV
(B) URJA MITRA
(C) MOPNG e Seva
(D) Petro e Seva

மார்ச் 2017-இல், மத்திய அமைச்சகத்தால் சமூக ஊடகங்களில் துவக்கி வைக்கப்பட்ட, பெட்ரோல் மற்றும் வாயுத் தொடர்பான சந்தேகங்களுக்கு என்று ஒருங்கிணைந்த குறை தீர்வு இயங்குதளம்

(A) Gem SPV
(B) URJA MITRA
(C) MOPNG e Seva (MOPNG e-சேவை)
(D) Petro e Seva (பெட்ரோ e-சேவை)

29. The new 4 elements added to the periodic table since 2011. They are

(A) 113, 114, 115 and 116
(B) 115, 116, 117 and 118
(C) 113, 115, 117 and 118
(D) 114, 116, 117 and 118

கீழ்கண்டவற்றில் எந்த புதிய நான்கு உறுப்புக்கள் தனிம அட்டவணையில் 2011-ல் இணைக்கப்பட்டது?

(A) 113, 114, 115 மற்றும் 116
(B) 115, 116, 117 மற்றும் 118
(C) 113, 115, 117 மற்றும் 118
(D) 114, 116, 117 மற்றும் 118

30. Which of the following day has the theme 'Cultural Heritage and Sustainable Tourism' in the year 2017?

(A) World Environment Day

(B) World Earth Day

(C) World Heritage Day

(D) World Meteorological Day

'கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் நிலைநிறுத்தத்தக்க சுற்றுலாவாண்மை' என்பது 2017-ஆம் ஆண்டிற்கான இந்த தினத்தின் கருப்பொருளாகும்

(A) உலக சுற்றுச்சூழல் தினம்

(B) உலக பூமி தினம்

(C) உலக பாரம்பரிய தினம்

(D) உலக வானியலாய்வு தினம்

31. Pick out the correct statement

(A) The global average surface temperature has increased over 20th century by about 0.6°C

(B) The global average surface temperature has increased over 20th century by about 0.7°C

(C) The global average surface temperature has increased over 20th century by about 0.8°C

(D) The global average surface temperature has increased over 20th century by about 1°C

சரியான கூற்றை சுட்டி காட்டவும்

(A) புவியின் சராசரி வெப்பத்தை விட 20-ஆம் நூற்றாண்டில் 0.6°C உயர்ந்துள்ளது

(B) புவியின் சராசரி வெப்பத்தை விட 20-ஆம் நூற்றாண்டில் 0.7°C உயர்ந்துள்ளது

(C) புவியின் சராசரி வெப்பத்தை விட 20-ஆம் நூற்றாண்டில் 0.8°C உயர்ந்துள்ளது

(D) புவியின் சராசரி வெப்பத்தை விட 20-ஆம் நூற்றாண்டில் 1°C உயர்ந்துள்ளது

32. Johannesburg 2002 United Nations Conference was on

(A) Software development

(B) Transport development

(C) Sustainable development

(D) Community development

ஐக்கிய நாடுகளின் மாநாடு 2002-இல் ஜோகனேஸ்பர்க்கில் நடந்தது. இதன் நோக்கம்

(A) மென்பொருள் மேம்பாடு

(B) போக்குவரத்து மேம்பாடு

(C) பேணத்தகுந்த மேம்பாடு

(D) சமூக மேம்பாடு

33. Match List I with List II :

| | List I<br>Place | | List II<br>River |
|---|---|---|---|
| (a) | London | 1. | Seine |
| (b) | Paris | 2. | Thames |
| (c) | Soviet Union | 3. | Cauvery |
| (d) | Tamil Nadu | 4. | Volga |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

பட்டியல் I-ஐ பட்டியல் II-உடன் பொருத்துக :

| | பட்டியல் I<br>இடம் | | பட்டியல் II<br>நதி |
|---|---|---|---|
| (a) | லண்டன் | 1. | சீன் |
| (b) | பாரிஸ் | 2. | தேம்ஸ் |
| (c) | சோவியத் யூனியன் | 3. | காவிரி |
| (d) | தமிழ்நாடு | 4. | வோல்கா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

34. Where we can see the 'Sigiriya Paintings' which is highly influenced by the Ajantha style?

(A) Burma
(B) Sumatra
(C) China
(D) Sri Lanka

அஜந்தா ஓவியங்களின் தாக்கத்தைப் பெற்றுள்ள "சிகிரியா" ஓவியங்கள் உள்ள இடம்

(A) பர்மா
(B) சுமத்ரா
(C) சீனா
(D) இலங்கை

35. List out the five dynasties of Delhi sultanates in order

(A) Slave, Khilji, Tughlaq, Sayyids, Lodis
(B) Khilji, Slave, Tughlaq, Lodis, Sayyids
(C) Lodis, Sayyids, Tughlaq, Khilji, Slave
(D) Slave, Lodis, Sayyids, Khilji, Tughlaq

டெல்லி சுல்தானியத்தை ஆட்சி செய்த ஐந்து வம்சங்களை வரிசைப்படுத்துக

(A) அடிமை, கில்ஜி, துக்ளக், சையது, லோடி
(B) கில்ஜி, அடிமை, துக்ளக், லோடி, சையது
(C) லோடி, சையது, துக்ளக், கில்ஜி, அடிமை
(D) அடிமை, லோடி, சையது, கில்ஜி, துக்ளக்

36. The founder of the Bahmani kingdom was

(A) Muhammad Shah
(B) Firoz Shah
(C) Mahmud Gawan
(D) Alauddin Bahman Shah

பாமினி அரசை நிறுவியவர்

(A) முகமது ஷா
(B) பிரோஸ் ஷா
(C) முகமது காவன்
(D) அலாவுதீன் பாமன்ஷா

37. "Doab" means

(A) The region between two cities

(B) The region between two rivers

(C) The region between two mountains

(D) None of these

"தோ ஆப்" எனப்படுவது

(A) இரு நகரங்களுக்கு இடைப்பட்ட பகுதி

(B) இரு நதிகளுக்கு இடைப்பட்ட பகுதி

(C) இரு மலைகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதி

(D) இவற்றுள் எதுவுமில்லை

38. The First Secretary General of SAARC

(A) Jinnah

(B) Abul Ahsan

(C) Kofi Annan

(D) Gandhiji

சார்க் அமைப்பின் முதல் பொதுச் செயலாளர்

(A) ஜின்னா

(B) அபுல் ஆஷான்

(C) கோபி ஆனன்

(D) காந்திஜி

39. Pt. Jawaharlal Nehru's Five principles of peace are named as

(A) Swadeshi

(B) Apartheid

(C) New Deal

(D) Pancha Sheel

பண்டித ஜவஹர்லால் நேருவின் அமைதிக்கான ஐந்து அம்ச கொள்கை

(A) சுதேசி

(B) இன ஒதுக்கல்

(C) புதிய பயனுரிமை

(D) பஞ்ச சீலம்

40. Recognized official language of India

(A) 25 (B) 22

(C) 23 (D) 27

இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட மொழிகள்

(A) 25 (B) 22

(C) 23 (D) 27

41. The Supreme Court consists of how many judges?

(A) 26 (B) 22

(C) 25 (D) 21

உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட எத்தனை நீதிபதிகள் உள்ளனர்?

(A) 26 (B) 22

(C) 25 (D) 21

42. The Parliament of India consist of

(A) One house

(B) Two houses

(C) Three houses

(D) Four houses

இந்திய பாராளுமன்றம் ———————— அவையை கொண்டதாகும்.

(A) ஒரு அவை

(B) இரண்டு அவைகள்

(C) மூன்று அவைகள்

(D) நான்கு அவைகள்

43. An entrepreneur is like

(A) a crow
(B) a duck
(C) a peacock
(D) an eagle

ஒரு தொழில்முனைவோர் என்பவர் யாரை போல உள்ளார்?

(A) ஒரு காகம்
(B) ஒரு வாத்து
(C) ஒரு மயில்
(D) ஒரு கழுகு

44. How many people does each ration shop serve?

(A) 2000
(B) 2500
(C) 3000
(D) 3500

ஒவ்வொரு நியாய விலைக் கடையும் எவ்வளவு மக்களுக்கு உதவுகிறது?

(A) 2000
(B) 2500
(C) 3000
(D) 3500

45. Which Government started the Land reform legislation?

(A) Panchayat
(B) Local Government
(C) State Government
(D) Central Government

நிலச்சீர்திருத்த சட்டத்தை தொடங்கிய அரசு எது?

(A) பஞ்சாயத்து
(B) உள்ளூர் அரசு
(C) மாநில அரசு
(D) மத்திய அரசு

46. What was the fund limit of a small scale industry in the tenth five year plan?

(A) 75 lakhs
(B) 100 lakhs
(C) 50 crores
(D) 75 crores

பத்தாம் ஐந்தாண்டு திட்டத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் நிதி அளவு என்ன?

(A) 75 லட்சம்
(B) 100 லட்சம்
(C) 50 கோடி
(D) 75 கோடி

47. The 1857 Revolt was sparked off due to the reason

(A) New form of turban
(B) Greased Cartridges
(C) Doctrine of Lapse
(D) Abolished the Bata

1857-ஆம் ஆண்டு கலகத்துக்கு உடனடிக் காரணம்

(A) புதிய வகை தலைப்பாகை
(B) கொழுப்பு தடவிய தோட்டாக்கள்
(C) வாரிசு இழப்புக் கொள்கை
(D) இரட்டைப்படி ரத்து செய்தல்

48. Who repealed the Vernacular Press Act and earned much popularity among India?

(A) Lord Curzon
(B) Lord Ripon
(C) Lord Lytton
(D) Lord Maya

நாட்டு மொழி செய்தித்தாள் சட்டத்தை ரத்து செய்து இந்திய மக்களிடையே பெரும் புகழ் பெற்றவர்

(A) கர்சன் பிரபு
(B) ரிப்பன் பிரபு
(C) லிட்டன் பிரபு
(D) மேயோ பிரபு

49. If $\frac{1}{8}$ of a pencil is black, $\frac{1}{2}$ of the remaining is white and the remaining $3\frac{1}{2}$ cm is blue. Find the total length of the pencil.

(A) 9 cms (B) 7 cms

(C) 8 cms (D) 10 cms

ஒரு பென்சிலின் 8-இல் 1 பாகம் கருப்பு நிறமாகவும், மீதிப் பகுதியில் பாதி வெள்ளை நிறமாகவும், மீதமுள்ள பகுதி $3\frac{1}{2}$ செ.மீ. நீல நிறமாகவும் இருந்தால், பென்சிலின் மொத்த நீளம் என்ன?

(A) 9 செ.மீ. (B) 7 செ.மீ.

(C) 8 செ.மீ. (D) 10 செ.மீ.

50. A tin of oil was $\frac{4}{5}$ full. When 6 bottles of oil were taken out and four bottles of oil were poured into it, it was $\frac{3}{4}$ full. How many bottles of oil can the tin contain?

(A) 35 (B) 40

(C) 42 (D) 60

ஒரு எண்ணெய் டின் $\frac{4}{5}$ பாகம் நிறைந்திருந்தது. அதிலிருந்து 6 புட்டிகள் எண்ணெயை எடுத்துவிட்டு, 4 புட்டிகள் எண்ணெயை ஊற்றும் பொழுது அது $\frac{3}{4}$ பாகம் நிறைந்திருந்தது எனில், அந்த டின்னுடைய முழு கொள்ளளவிற்கு எத்தனை புட்டிகள் எண்ணெய் தேவையாகிறது?

(A) 35 (B) 40

(C) 42 (D) 60

51. When an amount was distributed among 14 boys, each of them got ₹ 80 more than the amount received by each boy when the same amount is distributed equally among 18 boys. What was the amount?

(A) ₹ 5,010 (B) ₹ 5,020

(C) ₹ 5,040 (D) ₹ 5,000

ஒரு குறிப்பிட்ட தொகையை 14 பையன்களிடையே பங்கிடும் பொழுது, அதே தொகையை 18 பேரிடம் சமமாகப் பங்கிடும் பொழுது கிடைப்பதை விட ஒவ்வொருவரும் ₹ 80 அதிகம் பெறுகிறார்கள். தொகை என்ன?

(A) ₹ 5,010 (B) ₹ 5,020

(C) ₹ 5,040 (D) ₹ 5,000

52. Cost of 3 pencils and 5 erasers is ₹ 34 and cost of 2 pencils and 7 erasers is ₹ 30 then cost of a pencil is

(A) ₹ 8 (B) ₹ 5

(C) ₹ 4 (D) ₹ 2

3 எழுதுகோல்களும் 5 அழிப்பான்களும் சேர்ந்து விலை ₹ 34 மேலும் 2 எழுதுகோல்களும் 7 அழிப்பான்களும் சேர்ந்து வில்லை ₹ 30 எனில் ஒரு எழுதுகோலின் விலை என்ன?

(A) ₹ 8 (B) ₹ 5

(C) ₹ 4 (D) ₹ 2

53. Any point on $X$-axis has its

(A) abscissa zero

(B) ordinate zero

(C) abscissa and ordinate are zeros

(D) neither abscissa nor ordinate as zero

$X$ அச்சின் மீதமைந்த எந்தவொரு புள்ளிக்கும் அதன்

(A) கிடைமட்ட ஆயக்கூறு பூஜ்யம்

(B) குத்தாயக் கூறு பூஜ்யம்

(C) கிடைமட்ட மற்றும் குத்தாயக் கூறுகள் பூஜ்யம்

(D) கிடைமட்ட மற்றும் குத்தாயக் கூறுகள் பூஜ்யம் அல்ல

54. The sides (in c.m.) of a right angled triangle are $x-1$, $x$, $x+1$. Then area of the right angled triangle is

(A) 12 sq. cm. (B) 6 sq. cm.

(C) 20 sq. cm. (D) 22 sq. cm.

ஒரு செங்கோண முக்கோணத்தின் பக்கங்கள் (செ.மீ.) $x-1$, $x$, $x+1$ எனில் அச்செங்கோண முக்கோணத்தின் பரப்பளவு

(A) 12 ச.செ.மீ. (B) 6 ச.செ.மீ.

(C) 20 ச.செ.மீ. (D) 22 ச.செ.மீ.

55. A cuboid box has the square base of side $a$ cm and height $b$ cm then volume of the box is

(A) $a^2b^2$ cm$^3$ (B) $ab^2$ cm$^3$

(C) $a^2b$ cm$^3$ (D) $\frac{a^2b^2}{3}$ cm$^3$

கன செவ்வகப் பெட்டி ஒன்றின் அடிப்பக்கம் சதுரமாகவும் அச்சதுரத்தின் பக்கம் $a$ செ.மீ. ஆகவும் பெட்டியின் உயரம் $b$ செ.மீ. ஆகவும் இருப்பின் அதன் கன அளவு

(A) $a^2b^2$ செ.மீ.$^3$ (B) $ab^2$ செ.மீ.$^3$

(C) $a^2b$ செ.மீ.$^3$ (D) $\frac{a^2b^2}{3}$ செ.மீ.$^3$

56. Price of a suitcase is increased from ₹ 2,000 to ₹ 2,500. What is the percentage of increase?

(A) 20% (B) 22%

(C) 30% (D) 25%

பெட்டியொன்றின் விலை ₹ 2,000-ல் இருந்து ₹ 2,500-ஆக அதிகரிக்கப்பட்டால்; அதிகரிப்பின் சதவீதம் யாது?

(A) 20% (B) 22%

(C) 30% (D) 25%

57. The difference between simple interest and compound interest on ₹ 2,400 at 2 years at 5% per annum compounded annually

(A) ₹ 5 (B) ₹ 6

(C) ₹ 7 (D) ₹ 8

₹ 2,400-க்கு 5% ஆண்டு வட்டி வீதம் 2 ஆண்டுகளில் கிடைக்கும் தனி வட்டிக்கும், கூட்டு வட்டிக்கும் உள்ள வித்தியாசம்

(A) ₹ 5 (B) ₹ 6

(C) ₹ 7 (D) ₹ 8

58. Three men A, B and C can complete a work in 10, 15, 30 days respectively. A and B work together for 3 days then A leaves and C joins. In how many days can B and C finish the remaining work?

(A) 5 days (B) 6 days

(C) 10 days (D) 7 days

A, B, C என்ற மூன்று மனிதர்கள் ஒரு வேலையை தனித்தனியே 10, 15, 30 நாட்களில் முடிப்பார்கள். A-யும் B-யும் மூன்று நாட்களுக்கு சேர்ந்து வேலை பார்த்துவிட்டு A விலகி விட C சேர்ந்து கொள்கிறார். மீதமுள்ள வேலையை B-யும் C-யும் எத்தனை நாட்களில் முடிப்பர்?

(A) 5 நாட்கள் (B) 6 நாட்கள்

(C) 10 நாட்கள் (D) 7 நாட்கள்

59. A car covers a distance of 90 km at a uniform speed. Had the speed been 15 km/hr, more, then it would have taken 30 minutes less for the journey. Then actual speed of the car is

(A) 45 km/hr (B) 75 km/hr

(C) 60 km/hr (D) 90 km/hr

ஒரு மகிழுந்து வண்டியானது ஒரே சீரான வேகத்தில் 90 கி.மீ. தூரத்தை கடக்கிறது. அதன் வேகத்தில் 15 கி.மீ./மணி என்றளவு அதிகரிக்கப்பட்டிருந்தால் பயண நேரம் 30 நிமிடங்கள் குறைந்திருக்கும் எனில் அவ்வுந்து சென்ற சீரான வேகம் எது?

(A) 45 கி.மீ./மணி (B) 75 கி.மீ./மணி

(C) 60 கி.மீ./மணி (D) 90 கி.மீ./மணி

60. Median of first eight non-negative integers is

(A) 4 (B) 3.5

(C) 8 (D) 8.5

முதல் எட்டு குறையற்ற முழு எண்களின் இடைநிலையளவு எது?

(A) 4 (B) 3.5

(C) 8 (D) 8.5

61. Which of the following pair is correct?

(A) 6400 km and $6.4 \times 10^8$ cm

(B) $2 \times 10^4$ cm and $2 \times 10^6$ mm

(C) 800 m and $80 \times 10^2$ mm

(D) 100 μm and 1 mm

கீழ்கண்டவற்றுள் எவை சமமானவை?

(A) 6400 km மற்றும் $6.4 \times 10^8$ cm

(B) $2 \times 10^4$ cm மற்றும் $2 \times 10^6$ mm

(C) 800 m மற்றும் $80 \times 10^2$ mm

(D) 100 μm மற்றும் 1 mm

62. The hottest planet of our solar system

(A) Neptune

(B) Venus

(C) Pluto

(D) Uranus

சூரிய குடும்பத்தின் மிக வெப்பமான கோள்

(A) நெப்டியூன்

(B) புதன்

(C) புளுட்டோ

(D) யுரேனஸ்

63. A conductor of length 50 cm carrying a current of 5 A is placed perpendicular to a magnetic field of induction $2 \times 10^{-3}$ T. Find the force on the conductor.

(A) $5 \times 10^{-3}$ N

(B) $3 \times 10^3$ N

(C) $4.9 \times 10^3$ N

(D) $5 \times 10^3$ N

5 A மின்னோட்டம் பாயும் 50 செ.மீ. நீளமுள்ள கடத்தி $2 \times 10^{-3}$ T காந்த தூண்டல் கொண்ட காந்த புலத்திற்கு செங்குத்தாக வைக்கப்படுகிறது. கடத்தியின் மீது செயல்படும் விசையைக் காண்க.

(A) $5 \times 10^{-3}$ N

(B) $3 \times 10^3$ N

(C) $4.9 \times 10^3$ N

(D) $5 \times 10^3$ N

64. Which of the following weights the most?

(A) One mole of water

(B) One mole of sodium

(C) One molecule of $H_2SO_4$

(D) One gram-atom of nitrogen

கீழ்காண்பவற்றுள் எது கனமானது?

(A) ஒரு மோல் நீர்

(B) ஒரு மோல் சோடியம்

(C) ஒரு மூலக்கூறு $H_2SO_4$

(D) ஒரு கிராம் அணு நைட்ரஜன்

65. The elements like silicon, tellurium and germanium can be purified by

(A) Electrolytic refining

(B) Mond's process

(C) Zone refining

(D) Pattinson's process

சிலிகன், டெலுரியம், ஜெர்மானியம் போன்ற தனிமங்களை தூய்மைபடுத்த பயன்படும் முறை

(A) மின்னாற் தூய்மையாக்கல்

(B) மாண்ட் முறை

(C) துருவமுனைத் தூய்மையாக்கல்

(D) பாட்டின்சன் முறை

66. —————— is the basic unit of classification.

(A) Division (B) Family

(C) Class (D) Species

வகைப்பாட்டியலின் அடிப்படை அலகு —————— ஆகும்.

(A) பிரிவு (B) குடும்பம்

(C) வகுப்பு (D) சிற்றினம்

67. Who coined the term "Biosystematic"?

(A) Bentham and Hooker
(B) Camp and Gily
(C) Watson and Crick
(D) Garner and Allard

"பரிசோதனை வகைப்பாட்டியல்" என்ற சொற்களை புழக்கத்திற்கு கொண்டு வந்தவர்கள் யார்?

(A) பெந்தம் மற்றும் ஹுக்கர்
(B) கேம்ப் மற்றும் கில்லி
(C) வாட்சன் மற்றும் கிரிக்
(D) கார்னர் மற்றும் ஆலார்டு

68. Bacterial diseases syphilis is caused by

(A) Vibrio cholerae
(B) Treponema pallidium
(C) Neisseria gonorrhoea
(D) Yersinia pestis

சிபிலிஸ் என்ற பாக்டீரிய நோய் உருவாக காரணமான கிருமி

(A) விப்ரியோ காலரே
(B) டிரிபோனிமா பாலிடம்
(C) நிஸ்சேரியா கொனோரியா
(D) எர்சினியா பெஸ்டிஸ்

69. Which hormone is called as fight, flight and fright hormone?

(A) Epinephrine
(B) Glucagon
(C) Thyroxine
(D) Vasopressin

எந்த ஹார்மோன் கோபம், ஓட்டம் மற்றும் பயமுறுத்தல் ஹார்மோன் என்று அழைக்கப்படுகிறது?

(A) எபிநெஃபரின்
(B) குளுக்கோகான்
(C) தைராக்ஸின்
(D) வாஸோப்பிரஸ்ஸின்

70. What is the theme of the 2017 World Health Day (WHD)?

(A) Move for health

(B) Food safety

(C) Depression : Let's talk

(D) Working together for health

2017 உலக உடல்நல நாளின் கருப்பொருள் (ஆய்வுப் பொருள்) எது?

(A) உடல்நலம் நோக்கி செல்லுதல்

(B) உணவு பாதுகாப்பு

(C) மன அழுத்தம் : பேசலாம்

(D) உடல்நலத்திற்காக இணைந்து பணியாற்றல்

71. The 104th Indian Science Congress meet was held in

(A) Sri Venkateswara University, Tirupathi

(B) Anna University, Chennai

(C) Osmania University, Hyderabad

(D) Jawaharlal Nehru University, Delhi

104வது இந்திய அறிவியல் கழக கூட்டம் நடைபெற்ற இடம்

(A) ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைகழகம், திருப்பதி

(B) அண்ணா பல்கலைகழகம், சென்னை

(C) ஒஸ்மானியா பல்கலைகழகம், ஹைதராபாத்

(D) ஜவஹர்லால் நேரு பல்கலைகழகம், டெல்லி

72. Which one of the following is correctly matched?

(A) Narayan Murthy – Hoover Medal

(B) Anand Kumar – Kyoto prize

(C) Aiswarya Rai – Legion of honour

(D) Amartya Sen – Knight of the order of Arts and letters

கீழ்குறிப்பிடப்படுபவற்றுள் எது சரியாக பொருந்துகிறது?

(A) நாராயண் மூர்த்தி – ஹூவர் கேடயம்

(B) ஆனந்த் குமார் – கியோதோ பரிசு

(C) ஐஸ்வர்யா ராய் – லீஜியன் ஆப் ஆணர்

(D) அமர்த்தியா சென் – நைட் ஆப் தி ஆர்டர் ஆப் ஆர்ட்ஸ் அண்டு லெட்டர்ஸ்

73. Who is the Chief Minister of Kerala?

(A) Ooman Chandy (B) A.K. Antony

(C) Pinarayi Vijayan (D) Baby John

கேரளா முதலமைச்சர் யார்?

(A) உம்மன் சாண்டி (B) எ.கெ. ஆன்டணி

(C) பினராய் விஜயன் (D) பேபி ஜான்

74. With which field, Dev Patel in associated?

(A) Drama (B) Cinema

(C) Fine Arts (D) Sports

தேவ் பட்டேல் எந்த துறையோடு தொடர்புடையவர்?

(A) நாடகம் (B) திரைப்படம்

(C) கவின் கலை (D) விளையாட்டு

75. ISRO creates history in space by launching 104 satellites in one go on

(A) 15th January 2017

(B) 13th February 2017

(C) 10th December 2016

(D) 15th February 2017

104 செயற்கை கோள்களை ஒரே முறையாக விண்ணில் செலுத்தி இஸ்ரோ வரலாற்றுச் சாதனை படைத்த நாள்

(A) 15, ஜனவரி, 2017

(B) 13, பிப்ரவரி, 2017

(C) 10, டிசம்பர், 2016

(D) 15, பிப்ரவரி, 2017

76. How many candidates contested in the R.K. Nagar By-Election in 2017?

(A) 127
(B) 62
(C) 68
(D) 45

2017-ல் R.K. நகர் இடைத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை

(A) 127
(B) 62
(C) 68
(D) 45

77. Malaysian Air Flight crash of 2014 was done by

(A) Syria
(B) Iran
(C) Ukraine
(D) Pakistan

2014ஆம் ஆண்டு மலேசிய விமானத்தை தாக்கி வீழ்த்தியது

(A) சிரியா
(B) ஈரான்
(C) உக்ரைன்
(D) பாகிஸ்தான்

78. The software used to navigate through the web is known as

(A) Website
(B) Web Browser
(C) Internet
(D) World Wide Web

இணையத்தில் உலவிட உதவிடும் மென்பொருள் எது?

(A) இணையதளம்
(B) இணைய உலவி
(C) இணையம்
(D) உலகளாவிய வலை அமைப்பு

79. ASCI has set up a set of guidelines for celebrities endorsing products in April 2017. ASCI is

(A) Authorized Standards Council of India
(B) Advertising Standards Council of India
(C) Authentic Standards Council of India
(D) Authentic Standards Court of India

உற்பத்திப் பொருட்களுக்கு ஒப்பளித்து வரும் பிரமுகர்களுக்கான வழிமுறை தொகுப்பு ஒன்றினை ASCI, ஏப்ரல் 2017-இல் நிறுவியுள்ளது. ASCI என்பது

(A) Authorized Standards Council of India
(B) Advertising Standards Council of India
(C) Authentic Standards Council of India
(D) Authentic Standards Court of India

80. The technology which transforms soybean oil into graphene films in a single step is named as

(A) Graphsoy Technology
(B) Graph Air Technology
(C) Bean Graph Technology
(D) Nut Graph Technology

சோயா அவரை எண்ணெயை ஒற்றைப் படியில் கிராஃபீன் படலங்களாக உருமாற்றம் செய்யும் தொழிற்நுட்பம் இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது

(A) கிராஃப்சோய் தொழிற்நுட்பம்
(B) கிராஃப்ஏர் தொழிற்நுட்பம்
(C) பீன்கிராஃப் தொழிற்நுட்பம்
(D) நட்கிராஃப் தொழிற்நுட்பம்

81. Match the following :

| | Earth Quake | Related to year |
|---|---|---|
| (a) | Lomaprieta | 1. 1999 |
| (b) | North ridge | 2. 1989 |
| (c) | The Turkey | 3. 2003 |
| (d) | The Algeria | 4. 1994 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

பொருத்துக :

| | புவியதிர்ச்சி | தொடர்புள்ள ஆண்டு |
|---|---|---|
| (a) | லோமாபிரீட்டா | 1. 1999 |
| (b) | நார்த்ரிட்ஜ் | 2. 1989 |
| (c) | துருக்கி | 3. 2003 |
| (d) | அல்ஜீரியா | 4. 1994 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

82. Pick out the correct statement

(A) India receives 75 percent of its water supply from ground water mining

(B) Saudi Arabia receives 75 percent of its water supply from ground water mining

(C) Iran receives 75 percent of its water supply from ground water mining

(D) Sudan receives 75 percent of its water supply from ground water mining

சரியான விடையை கண்டுபிடிக்கவும்

(A) இந்தியா 75 விழுக்காடு நீரை நிலத்தடி நீர் மூலம் பெறுகின்றது

(B) சவூதி அரேபியா 75 விழுக்காடு நீரை நிலத்தடி நீர் மூலம் பெறுகின்றது

(C) ஈரான் 75 விழுக்காடு நீரை நிலத்தடி நீர் மூலம் பெறுகின்றது

(D) சூடான் 75 விழுக்காடு நீரை நிலத்தடி நீர் மூலம் பெறுகின்றது

83. Theory that explains the location of industry

(A) Weber's Theory
(B) Christaller Theory
(C) Vonthunan Theory
(D) Malthus Theory

"தொழிலக அமைவிட கோட்பாடு"

(A) வெபர் கோட்பாடு
(B) கிறிஸ்டாலர் கோட்பாடு
(C) வான்தூனன் கோட்பாடு
(D) மால்தஸ் கோட்பாடு

84. 'Aryavarta' referred to

(A) Central India
(B) Srilanka
(C) South India
(D) North India

ஆர்யவர்த்தம் எனப்படுவது

(A) மத்திய இந்தியா
(B) இலங்கை
(C) தென்னிந்தியா
(D) வட இந்தியா

85. The last Mauryan king was

(A) Kunala
(B) Dasaratha
(C) Samprati
(D) Brihatratha

மௌரிய வம்சத்தின் கடைசி அரசன்

(A) குணாளன்
(B) தசரதன்
(C) சாம்பிரதி
(D) பிருகத்ரதன்

86. Match the leaders and their reform movements :

| | | | |
|---|---|---|---|
| (a) | Raja Ram Mohan Roy | 1. | Theosophical Society |
| (b) | Dr. Atmaram Pandurang | 2. | Arya Samaj |
| (c) | Madam H.P. Blavatsky | 3. | Prarthana Samaj |
| (d) | Dayananda Saraswathi | 4. | Brahmo Samaj |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

சமூக சீர்திருத்த வாதிகளையும் அவர்களின் இயக்கங்களையும் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | ராஜாராம் மோகன்ராய் | 1. | பிரம்மஞான சபை |
| (b) | ஆத்மராம் பாண்டுரங் | 2. | ஆர்ய சமாஜம் |
| (c) | மேடம் H.P பிளாவட்ஸ்கி | 3. | பிரார்த்தனா சமாஜம் |
| (d) | தயானந்த சரஸ்வதி | 4. | பிரம்ம சமாஜம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

87. Bimbisara belongs to which dynasty?

(A) Haryanka Dynasty
(B) Shisunaga Dynasty
(C) Nanda Dynasty
(D) Mourya Dynasty

பிம்பிசாரன் எந்த வம்சத்தைச் சார்ந்தவர்?

(A) ஹர்யங்கா வம்சம்
(B) சிசுநாக வம்சம்
(C) நந்த வம்சம்
(D) மௌரிய வம்சம்

88. How many kinds of Democracy are there?

(A) 3
(B) 2
(C) 1
(D) 4

மக்களாட்சி எத்தனை வகைப்படும்?

(A) 3
(B) 2
(C) 1
(D) 4

89. The most popular form of Government in modern days

(A) Monarchy
(B) Oligarchy
(C) Democracy
(D) Hierarchy

தற்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற அரசாங்க முறை

(A) மன்னராட்சி
(B) உயர் குடியாட்சி
(C) மக்களாட்சி
(D) சர்வாதிகார ஆட்சி

90. Election Commission of India is situated at

(A) New Delhi
(B) Mumbai
(C) Chennai
(D) Moradabad

இந்திய தேர்தல் ஆணையம் அமைந்துள்ள இடம்

(A) புது டெல்லி
(B) மும்பை
(C) சென்னை
(D) முராதாபாத்

91. The father of Local Self Government is

(A) Gandhiji
(B) Lord Ripon
(C) Nehruji
(D) Mountbatten

உள்ளாட்சி அரசாங்கத்தின் தந்தை என்று அழைக்கப்படுவர்?

(A) காந்திஜி
(B) ரிப்பன் பிரபு
(C) நேருஜி
(D) மவுண்ட்பேட்டன்

92. Money bills can be delayed by the Rajya Sabha only for

(A) 30 days
(B) 20 days
(C) 14 days
(D) 7 days

நிதி மசோதாக்கள் மாநில அவையினால் எத்தனை நாட்கள் மட்டும் தாமதப்படுத்தலாம்?

(A) 30 நாட்கள்
(B) 20 நாட்கள்
(C) 14 நாட்கள்
(D) 7 நாட்கள்

93. 44th Amendment Act came into force in the year

(A) 1976
(B) 1947
(C) 1950
(D) 1978

44வது சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வந்த ஆண்டு

(A) 1976
(B) 1947
(C) 1950
(D) 1978

94. The first census of India was taken in the year

(A) 1870
(B) 1872
(C) 1874
(D) 1881

இந்தியாவில் முதன்முதலில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்த ஆண்டு

(A) 1870
(B) 1872
(C) 1874
(D) 1881

95. In the procession against the Simon Commission he received fatal injury and died later

(A) Bal Gangadhar Tilak
(B) Lala Lajpat Rai
(C) Tiruppur Kumaran
(D) Gokhale

சைமன் குழுவிற்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டு காயமடைந்து பின்னர் உயிர் நீத்தவர்

(A) பால கங்காதர திலகர்
(B) லாலா லஜ்பதி ராய்
(C) திருப்பூர் குமரன்
(D) கோகலே

96. In 1928 a committee consisting of eight, was constituted to draw up a blue print for the future constitution of India. It was headed by

(A) C.R. Doss
(B) Lal Bahadur Shastri
(C) Mothilal Nehru
(D) Mohammad Ali Jinnah

1928-ல் எதிர்கால இந்தியாவின் அரசியலமைப்பு சட்டம் ஒன்றை வரைவதற்கு எட்டு பேர் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைவர்

(A) C.R. தாஸ்
(B) லால் பகதூர் சாஸ்திரி
(C) மோதிலால் நேரு
(D) முகமது அலி ஜின்னா

97. Which of the following statement is not correct?

(A) Lord Mount Batten was made the first Governor General of Independent India
(B) Mohammad Ali Jinnah became the first Governor General of Pakistan
(C) On 15th Aug 1947 India became an independent state
(D) On 16th Aug 1947 Pakistan became an independent state

கீழ்க்கண்ட கூற்றுகளுள் தவறானது எது?

(A) சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர் மௌண்ட் பேட்டன்
(B) பாகிஸ்தானின் முதல் தலைமை ஆளுநர் முகமது அலி ஜின்னா
(C) 1947 ஆகஸ்ட் 15-ஆம் நாள் இந்தியா சுதந்திரம் அடைந்தது
(D) 1947 ஆகஸ்ட் 16-ஆம் நாள் பாகிஸ்தான் சுதந்திரம் அடைந்தது

98. In which years was the import of food grains in India is Nil?

(A) 1989 and 1990

(B) 1993 and 1994

(C) 1995 and 1996

(D) 1997 and 1998

இந்தியாவின் உணவு தானியங்களின் இறக்குமதி பூஜ்ஜியமாக இருந்த ஆண்டு எது?

(A) 1989 மற்றும் 1990

(B) 1993 மற்றும் 1994

(C) 1995 மற்றும் 1996

(D) 1997 மற்றும் 1998

99. In which Agricultural crop production does India stand first in the world?

(A) Rice

(B) Groundnuts

(C) Tobacco

(D) Sugar

எந்த வேளாண்மைப் பயிர் உற்பத்தியில் இந்தியா உலகின் முதல் இடத்தில் நிற்கிறது?

(A) அரிசி

(B) வேர்கடலை

(C) புகையிலை

(D) சர்க்கரை

100. How much does India contribute to the world sugar production?

(A) 15%

(B) 20%

(C) 25%

(D) 30%

உலக சர்க்கரை உற்பத்தியில் இந்தியாவின் பங்கு எத்தனை சதவீதம்?

(A) 15%

(B) 20%

(C) 25%

(D) 30%

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

**AAOGS/17**

Register Number

# 2017
# GENERAL STUDIES
# (H.S.C. Std)

**Time Allowed : 2 Hours]** **[Maximum Marks : 200**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

## IMPORTANT INSTRUCTIONS

1. The applicant will be supplied with Question Booklet 10 minutes before commencement of the examination.
2. This Question Booklet contains **100** questions. Prior to attempting to answer the candidates are requested to check whether all the questions are there and ensure there are no blank pages in the question booklet. **In case any defect in the Question Paper is noticed it shall be reported to the Invigilator within first 10 minutes and get it replaced with a complete Question Booklet. If any defect is noticed in the Question Booklet after the commencement of examination it will not be replaced.**
3. Answer **all** questions. **All** questions carry equal marks.
4. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
5. An answer sheet will be supplied to you, separately by the Invigilator to mark the answers.
6. You will also encode your Register Number, Subject Code, Question Booklet Sl. No. etc. with Blue or Black ink Ball point pen in the space provided on the side 2 of the Answer Sheet. If you do not encode properly or fail to encode the above information, action will be taken as per commission's notification.
7. Each question comprises *four* responses (A), (B), (C) and (D). You are to select ONLY ONE correct response and mark in your Answer Sheet. In case you feel that there are more than one correct response, mark the response which you consider the best. In any case, choose ONLY ONE response for each question. Your total marks will depend on the number of correct responses marked by you in the Answer Sheet.
8. In the Answer Sheet there are **four** circles Ⓐ, Ⓑ, Ⓒ and Ⓓ against each question. To answer the questions you are to mark with Ball point pen ONLY ONE circle of your choice for each question. Select one response for each question in the Question Booklet and mark in the Answer Sheet. If you mark more than one answer for one question, the answer will be treated as wrong. *e.g.* If for any item, Ⓑ is the correct answer, you have to mark as follows :

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. You should not remove or tear off any sheet from this Question Booklet. You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Hall during the examination. After the examination is concluded, you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. The sheet before the last page of the Question Booklet can be used for Rough Work.
11. In all matters and in cases of doubt, the English Version is final.
12. Do not tick-mark or mark the answers in the Question Booklet.
13. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide at their discretion.

SEAL